## *11*

## திறவுகோல் வசனம்:
## *1 கொரிந்தியர் 10:16-22; 11:17-34*

# கொரிந்தியர்களுக்கு பவுலின் அறிவுறுத்துதல்கள்

கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய பவுலின் போதனை 1 கொரிந்தியர் நிருபத்தின் இருபகுதிகளில் (10:16-22; 11:17-34) காணப்படுகிறது.[1] வாரத்தின் முதல்நாளில் (நடபடிகள் 20:7) நாம் ஆராதனை ஊழியங்களுக்காக மற்ற கிறிஸ்தவர்களுடன் "ஒன்றாகக்கூடி வரும்போது" கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:17, 18, 33, 34; காண்க வசனம் 20). பவுல் அடிப்படை அறிவுறுத்துதல் கொடுத்ததுடன் கூடுதலாக, கொரிந்தியர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தலைப் பாதித்த, முதல் நூற்றாண்டு சபையில் இருந்த குறிப்பிட்ட பிரச்சனைகளைப் பற்றியும் பேசினார்.

## *1 கொரிந்தியர் 10:16-22*

இவ்வசனப் பகுதியில் இருந்து சில திறவுகோல் சொற்றொடர்களை ஆராய்தல் என்பது இராப்போஜனத்தைப் பற்றி மிகமுழுமையான புரிந்துகொள்ளுதலை வேதாகம மாணவருக்குத் தரக்கூடும்.

*"ஆசீர்வாதத்தின் பாத்திரம்"* (வசனம் 16). "பாத்திரம்" என்பதன் மூலம் பவுல் அதில் உள்ளவற்றை அர்த்தப்படுத்தினார், அதாவது நேர்ப்பொருளில் பாத்திரமல்ல ஆனால் பாத்திரத்தினுள் இருந்த பொருள் (திராட்ச இரசம்). மக்கள் பாத்திரத்தில் உள்ளவற்றைக் குடிக்கிறார்கள், பாத்திரத்தை அல்ல. நாம் பாத்திரத்தை "ஆசீர்வதிப்பது" இல்லை; மாறாக பாத்திரத்தில் உள்ளவற்றினால் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம், இது இயேசுவின் இரத்தத்தைக் குறிக்கிறது.

*"கிறிஸ்துவினுடைய இரத்தம்"* (வசனம் 16). இயேசுவின் இரத்தம் நேர்ப்பொருளில் பாத்திரமாக இருந்தது என்றோ அல்லது அது நேர்ப்பொருளில் பாத்திரத்தில் இருந்தது என்றோகூடப் பவுல் அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் பாத்திரத்தில் உள்ள திராட்ச இரசத்தில் இருந்து பானம்பண்ணுவதினால் அவரது இரத்தம் பகிர்ந்துகொள்ளப்படுகிறது என்றே அவர் அர்த்தப்படுத்தினார்.

*"நாம் பிட்கிற அப்பம்"* (வசனம் 16) என்பது இராப்போஜனத்தில் உண்ணப்பட்ட நேர்ப்பொருளான அப்பமாக இருந்தது. இயேசுவின் சரீரமல்ல ஆனால் அப்பம்தான் பிட்கப்பட்டது என்று பவுல் போதித்தார். கொரிந்தியர்கள் இயேசுவின் சரீரத்தை *அடையாளப்படுத்துவதற்கு* அப்பத்தைப் பயன்படுத்தியதன் மூலம், இயேசுவின் சரீரம் அங்கிருந்தது போன்று அதை ஆவிக்குரிய பிரகாரம் அவர்கள் கனப்படுத்த வேண்டி இருந்தது.

*"கிறிஸ்துவினுடைய சரீரம்"* (வசனம் 16). பவுல் இயேசுவின் சரீரத்தைப்

பற்றி எழுதினாலும், அவர் இயேசுவின் பௌதீகரீதியான சரீரம் பிட்கப்பட்டு உண்ணப்பட்டது என்று அர்த்தப்படுத்தவில்லை. கொரிந்தியர்கள் இயேசுவின் சரீரத்தை நேர்ப்பொருளில் உண்ணவில்லை ஆனால் அவர்கள் அப்பத்தைத்தான் உண்டனர் என்று அவர் (பவுல்) கூறினார்.

இருமுறை குறிப்பிடப்பட்டுள்ள *"ஒரே அப்பம்"* என்பது (வசனம் 17) அப்பங்களின் எண்ணிக்கையை அல்ல ஆனால் அதன் பொருளைக் குறிக்கிறது. ஹென்ரிக் மேயர்ஸ் அவர்கள், "*அப்பத்தின் ஒருமைத்தன்மை, இராப்போஜனத்தில் உள்ள ஒரே* மற்றும் *அதே அப்பம்* என்ற வகையில், *எண்ணிக்கையில் அல்ல* ... ஆனால் பண்பின் வகையிலேயே புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது" என்று சரியாக எடுத்துரைத்தார்.[2] ஒரே பொருளான அப்பத்தை உண்ணுதல் என்பது, அதில் பங்கேற்பவர்கள் ஆவிக்குரிய கருத்துணர்வில் ஒன்றாகும் வகையில் அவர்களை ஒன்றிணைக்க வேண்டும்.

*"ஒரே சரீரமுமாயிருக்கிறோம்"* (வசனம் 17). பவுல், கிறிஸ்துவின் பௌதீக ரீதியான சரீரம் என்ற சிந்தனையில் இருந்து சபை என்ற சிந்தனைக்கு வளர்நிலையில் சென்றார். பவுல் "கர்த்தருடைய சரீரம் (வசனம் 16) என்ற நேர்பொருளில் இருந்து சபையாகிய விசுவாசிகளின் சரீரம் என்ற உருவகப்பொருளுக்குக் கடந்து சென்றார்" என்று மார்வின் ஆர் வின்சென்ட் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்.[3]

*"கர்த்தருடைய பாத்திரத்திலும்"* (வசனம் 21) பாத்திரம் என்பது "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" (வசனம் 16) என்பது போன்றே உள்ளது. கொரிந்தியர்கள் பாத்திரத்தை அல்ல ஆனால் அதில் இருந்ததையே பானம் பண்ணினர்.

*"பேய்களுடைய பாத்திரத்திலும்"* (வசனம் 21). பேய்களை ஆராதிப்பவர்கள் எல்லாரும் ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணவில்லை, மற்றும் சிதறியிருந்த பல சபைகுழுமங்களில் உள்ள கிறிஸ்தவர்களும் ஒரே பாத்திரத்தில் பானம்பண்ணுவதில்லை. "பாத்திரம்" என்பது அதில் உள்ள நீர்மம் மற்றும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் பொருள் ஆகியவற்றையே குறிக்கிறதே தவிர அது நேர்ப்பொருளில் பாத்திரத்தைக் குறிப்பதில்லை.

*"கர்த்தருடைய போஜனபந்திக்கும்"* (வசனம் 21). "போஜன பந்தி" என்பதைப் பவுல் உருவக நடையில் பயன்படுத்துதலானது, போஜனபந்தியை அல்ல ஆனால் போஜனபந்தியில் இருந்ததையே கருத்தாகத் தெரிவித்தது. கர்த்தர் ஒரே ஒரு போஜனபந்தியைக் கொண்டிருந்தார் என்றோ அல்லது பேய்கள் ஒரே ஒரு போஜனபந்தியைக் கொண்டிருந்தன என்றோ அவர் மறைமுகமாகத் தெரிவிக்கவில்லை.

*"பேய்களுடைய போஜனபந்திக்கும்"*(வசனம் 21). பேய்களின் "போஜனபந்தி" என்பது கர்த்தருடைய "போஜனபந்தி" என்பதில் குறிப்பிடப்பட்டது போன்றே போஜனபந்தியில் இருந்தவற்றைப் பற்றிய ஒரு உருவகப்பேச்சாக உள்ளது. பேய்கள் ஒரே ஒரு போஜனபந்தியைக் கொண்டிருந்தன என்று பவுல் அர்த்தப்படுத்தவில்லை; அவர் "போஜனபந்தி" என்ற வார்த்தையை, புறதெய்வக் கோவில்களில் பேய்களுக்குப் படைக்கப்பட்டு, போஜனபந்தியில் பரிமாறப்பட்ட உணவுகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார்.

இந்தக் கருத்துக்களில் சிலவற்றிற்கு மிக ஆழமான பரிசீலனை தேவைப்படுகிறது.

**"ஆசீர்வாதத்தின் பாத்திரம்"**

*கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பதற்கு "ஆசீர்வாதம்" (eulogia) என்ற பெயர்ச்சொல் 1 கொரிந்தியர் 10:16ல் மாத்திரம் ஒரே முறை காணப்படுகிறது. இதன் செயப்படுபொருள் குன்றிய வினைச் சொல் (eulogeo) அப்பத்தையும் (மத்தேயு 26:26; மாற்கு 14:22) பாத்திரத்தையும் (1 கொரிந்தியர் 10:16) "ஆசீர்வதிக்க" பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஸ்தோத்திரம்" (eucharisteo, என்பது* "eucharist" *என்று ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) என்பது பாத்திரத்திற்காகவும் (மத்தேயு 26:27; மாற்கு 14:23; லூக்கா 22:17) அப்பத்திற்காகவும் (லூக்கா 22:19) நன்றி செலுத்துதல் என்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஆசீர்வதித்தல்" மற்றும் "ஸ்தோத்திரம் செய்தல்" என்பவை ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "ஆசீர்வதித்தல் என்பது பாத்திரத்தை ஆசீர்வாதம் செய்தல் என்பதைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் அதன்மீதான ஜெபத்தின் வகையைக் குறிக்கிறது."*[4]

*"ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்பதன் பின்னணி குறித்து, குறைந்தபட்சம் மூன்று கருத்துக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:*

> (i) கிரேக்க மதப்பிரிவினரின் உணவுகளினுடைய பின்னணி; (ii) யூதர்களின் வீடுகளில் அன்றாட உணவுகள் அல்லது ஒருவேளை யூதர்களின் ஐக்கிய விருந்துகளின் "விசேஷித்த" வடிவம் ... (iii) ... பஸ்கா உணவின் சந்தர்ப்பப்பொருள். ... பல எழுத்தாளர்கள் ... *ஆசீர்வாதத்தின் பாத்திரம்* என்பதை நான்கில் மூன்றாவது *பாத்திரத்துடன்* அடையாளப்படுத்துகின்றனர், இருப்பினும் சிலர் ... இது பஸ்காவின் நான்காவது பாத்திரமாக இருக்கவே அதிகம் வாய்ப்புள்ளது என்று விவாதிக்கின்றனர்.[5]

*பஸ்காவின் மூன்றாவது பாத்திரம் யூதர்களால் "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்று அழைக்கப்பட்டதால், 1 கொரிந்தியர் 10:16ல் பவுல் இதையே மனதில் கொண்டிருந்தார் என்று சில விளக்கவுரையாளர்கள் முடிவு செய்துள்ளனர். இது தற்செயலானதாகவோ அல்லது பவுலினால் ஒரு ஒப்பீடாகவோ மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்க முடியும், ஆனால் இவ்விரண்டில் எதுவும் தீர்மானமாக நிரூபிக்கப்பட முடியாது. பஸ்காவில் மூன்றாவது பாத்திரத்தைப் பயன்படுத்துதல் என்பது யூதர்களின் பாரம்பரியமாக மாத்திரமே இருந்தது, ஏனெனில் அதைப் பற்றிப் பழைய ஏற்பாடு ஒன்றும் கூறுவதில்லை. யூதப் பாரம்பரியத்திலிருந்து உயர்த்தப்பட்ட ஒரு சொற்றொடரைப் பவுல் - குறிப்பாகப் புறஜாதியார் ஏராளமாக இருந்த ஒரு சபைக்கு எழுதும்போது - ஏன் பயன்படுத்த வேண்டும்? "ஆசீர்வதிக்கிற பாத்திரம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதற்கு அது பவுலின் காரணமாக இருந்தால், இது அவரது வழக்கமான நடைமுறைக்கு ஒரு விதிவிலக்காக உள்ளது எனலாம். புதிய ஏற்பாட்டு நடைமுறைகளின் முன்னிழலை முக்கியத்துவப்படுத்திக் காண்பிக்க அவர், பழைய ஏற்பாட்டில் இருந்து சொற்றொடரைப் பயன்படுத்தினார் (ரோமர் 12:1; 1 கொரிந்தியர் 5:7; எபேசியர் 5:2; பிலிப்பியர் 2:17), ஆனால் ஏவுதல் பெற்றிராத பாரம்பரியங்களில் இருந்து அவர் இச்சொற்றொடரை எடுத்துக் கையாளவில்லை.*

*"அப்பத்திற்கு" முன் "பாத்திரத்தை" பவுல் குறிப்பிட்டது, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதின் வரிசைமுறைக்கு எவ்வித*

தனிக்குறிப்பையும் கொண்டிருப்பதில்லை. பவுல் "அப்பத்தைப் பற்றி மிக நீண்ட விளக்கம் அளித்திருந்தார், மற்றும் அத்துடன் விசேஷமாக இஸ்ரவேல் மக்கள் அப்பத்தில் பங்கேற்றல் பற்றிக் கலந்துரையாடினார், இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவு என்ற அவரது ஆய்வுக்கருத்திற்குப் பொருந்திற்று" என்பதால் பவுல் பாத்திரத்தை முதலில் குறிப்பிட்டார் என்று மேயர்ஸ் அவர்கள் கருத்துக் தெரிவித்தது அனேகமாக சரியானதாக இருக்கலாம்.[6] மற்ற வசனப்பகுதிகள் (மத்தேயு 26:26-28; மாற்கு 14:22-25; 1 கொரிந்தியர் 11:23-25) பாத்திரத்திற்கு முன்னர் அப்பம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்று தெளிவாகக் காண்பிக்கின்றன.

**"கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியம்"**

1 கொரிந்தியர் 10:16ல், "பகிர்தல்," "ஐக்கியம்" (KJV) மற்றும் "பங்கேற்றல்" (NIV) ஆகியவை *koinonia* என்பதன் மொழிபெயர்ப்புகளாக உள்ளன, இது ஒன்றுகூடிப் பொதுவாகப் பங்கிட்டுக் கொள்ளுதலை அர்த்தப்படுத்துகிறது (காண்க 1 கொரிந்தியர் 10:18, 20).

> *Koinonia* என்பது சபையின் பகுதிகளினுடைய உறுப்பினர்களின் திரட்சியாக இருப்பதில்லை, ஆனால் இது சபைக்குள் நிலவும் ஒரு உறவுமுறையாக அதன் மூலம் தியானிக்கப்படும் கருத்தாக, உறுப்பினர்கள் மற்றும் பகுதிகள் ஆகியவற்றினுள் ஒருவர் மற்றவருடன் மற்றும் முழு சபையுடன் கொண்டுள்ள உறவு முறையாக உள்ளது. ... இது அங்கு பங்கேற்பவரின் ஐக்கியத்திற்கு உரியதாக உள்ள எல்லாவற்றையும் பொதுவான விஷயமாக கொண்டிருப்பது கொள்கையளவில் உள்ளது.[7]

பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள், பலிபீடத்தில் பலிசெலுத்தப்பட்ட மிருகங்களின் குறிப்பிடப்பட்ட பாகங்களை உண்பதன் மூலம் பலிபீடத்தில் பங்குபெற்றனர் (லேவியராகமம் 8:31). கர்த்தருடைய பந்தியிலும் விக்கிரகத்தின் பந்தியிலும் உண்ட கிறிஸ்தவர்கள் இயேசு மற்றும் பேய்கள் ஆகியவற்றுடன் பங்கு கொண்டிருந்தனர். அவர்கள் இயேசுவுடனும் சக கிறிஸ்தவர்களுடனும் மாத்திரம் பங்குகொள்ள வேண்டும் பேய்களுடன் அல்ல என்று பவுல் விரும்பினார். "ஆராதனை அல்லது பலி என்ற குறிப்பிட்ட செயல்மூலம் ஐக்கியம் கொள்ளுதலை வலியுறுத்தவே, பவுல் *தேவனுடன்* என்பதற்கு மாறாக *பலிபீடத்துடன்* என்று கூறுகிறார்."[8]

பாத்திரமும் அப்பமும், இயேசுவின் உடல் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் ஐக்கியமாக அல்லது பகிர்தலாக உள்ளன.

> "கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கேற்றல்" என்பது, அவரது இரத்தத்தை நேரடியாகப் பானம் செய்தல் அல்ல ஆனால் கிறிஸ்துவுடனான ஐக்கியத்தின் நினைவு அடையாளம் என்று அர்த்தப்படுத்தப் பட வேண்டியதாக உள்ளது, இது இந்த இராப்போஜனத்தை ஏற்படுத்திய வேளையில் அவர் இன்னும் மரியாதிருந்தார் என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது, மற்றும் இந்தப் பங்கேற்றல் அவரைப் பானம் பண்ணுதலில் அல்ல ஆனால் அவரை நினைவுகூருதலிலேயே உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 11:25).[9]

கர்த்தருடைய இராப்போஜனத்தின் இயல்பான பொருள்களை (அப்பம் மற்றும் திராட்ச இரசம் ஆகியவற்றை) எடுத்துக் கொள்ளுகையில் ஆவிக்குரிய ஈடுபாடு இருக்க வேண்டிய அவசியமானது இந்த நிகழ்வை ஞானஸ்நானத்துடன் ஒப்பிடத்தக்கதாக ஆக்குகிறது. ஒருவர் உடல்ரீதியாகத் தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு எழுந்திருக்கையில் இருதயத்தில் இருந்து கீழ்ப்படிதல் அவசியமாகிறது (ரோமர் 6:4-18). "பாவத்திற்கு அடிமைகளாக இருந்தவர்கள்" "நீதிக்கு அடிமைகள்ஆயினர்" (ரோமர் 6:17, 18), மற்றும் ஞானஸ்நானத்தில் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு கழுவப்பட்டன (நடபடிகள் 2:38; 22:16; கொலோசெயர் 2:12, 13). ஞானஸ்நானம் தன்னில் மற்றும் தனக்குள் தானே இப்படிப்பட்ட மாற்றத்திற்குக் காரணமாக இயலாது; இத்துடன் இருதய மாற்றம் இணைவு பெற வேண்டும்.

அதுபோன்றே, கர்த்தருடைய இராப்போஜனத்தில் நாம் உடல்ரீதியாகப் பங்கேற்பதால் மாத்திரம் அதிலிருந்து ஆவிக்குரிய வகையில் பலன் பெற்றுவிடுவதில்லை. நாம் கர்த்தருடன் ஆவிக்குரிய வகையிலும் நமது சக கிறிஸ்தவர்களுடன் நியாயமான அளவுக்கும், இணைவு கொண்டு ஐக்கியம் கொள்ள வேண்டும்.

> கிறிஸ்தவர்கள் தங்களின் ஐக்கியச் செயல்பாட்டில் கர்த்தருடனும் ஒருவர் பிறருடனும் பங்காளிகளாக உள்ளனர், இது அவர் பின்வருமாறு கூறுமளவுக்கு (காண்க 1 கொரிந்தியர் 10:17) மிகநெருக்கமான மற்றும் முழுநிறைவான பங்காளித்துவமாக உள்ளது: *அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.*[10]

### "பாத்திரம்," "பந்தி" மற்றும் "அப்பம்"

"பாத்திரம்," "பந்தி" மற்றும் "அப்பம்" என்று எழுதியதில் பவுல், பேச்சின் உருவக நடைகளைப் பயன்படுத்தினார். "ஆகுபெயர்" என்று அழைக்கப்படும் குறிப்பிட்ட இந்த இலக்கியக் கருவியானது, ஒரு வார்த்தை தன்னுடன் இணைவுகொண்டுள்ள சிலவற்றை மறைமுகமாக உணர்த்தும் ஒப்பீடாக உள்ளது. பாத்திரமும் பந்தியும் அவைகள் கொண்டுள்ளவற்றிற்காக நிற்கின்றன. ஒரே அப்பம் (*artos*) என்பது, ஜீவ அப்பமாகிய இயேசுவைக் குறிக்கிறது. "சரீரம்" (அல்லது 1 கொரிந்தியர் 10:17ல் உள்ளது போன்று, "ஒரே சரீரம்") என்பதற்கான குறிப்புகள் சபைக்குப் பலமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ள (காண்க ரோமர் 12:5; 1 கொரிந்தியர் 12:13, 20; எபேசியர் 1:22, 23; 2:16; 4:4; கொலோசெயர் 1:18, 24; 3:15). இயேசு பாத்திரத்தை அல்ல ஆனால் பாத்திரத்தில் இருந்ததையே ஆசீர்வதித்தார். அதுபோன்றே பவுல், பந்தியை அல்ல ஆனால் பந்தியில் இருந்தவற்றையே குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 10:21).

அப்பத்தில் புசித்து கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறவர்கள் அவரது சரீரத்தையும் இரத்தத்தையும் ஆவிக்குரிய வகையில் பகிர்ந்து கொள்கின்றனர். இதற்கு நேர் எதிரிடையான கருத்தை 1 கொரிந்தியர் 10:21ல் நாம் காணுகிறோம்: விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்டவர்கள், அந்த விக்கிரகங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பேய்களுடன் ஆவிக்குரிய வகையில் பங்குகொள்கின்றனர்.

*"பேய்களின் பந்தி"*

*ஒருவர் கர்த்தருடைய பாத்திரத்தில் பானம் பண்ணி அத்துடன் பேய்களின் பாத்திரத்திலும் பானம்பண்ணுதலோ அல்லது கர்த்தருடைய பந்தியில் புசித்து அத்துடன் பேய்களின் பந்தியிலும் புசித்தலோ "இயலாது" என்று பவுல் எழுதினார். அவர் சாத்தியமற்ற தன்மையை அல்ல, ஆனால் ஒன்றுக்கொன்று தனிப்பட்ட வகையில் உள்ள இருநடைமுறைகளில் ஒரே வேளையில் ஈடுபடுதலின் முரண்பாடான தன்மையையே மறைமுகமாக உணர்த்தினார். புறதெய்வங்களை ஆராதித்து அவர்களின் பந்தியில் பங்கேற்றவர்கள் அந்தப் பந்திகளுடன் இணைவுகொண்டுள்ள பேய்களை ஆராதித்தனர். "கூடாதே" என்பது, பிற வசனப்பகுதிகளில் உள்ளது போன்று, "நிகழ்வதற்கு அரிதான" மற்றும் "சிரமமின்றி இராது" என்ற வகையில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 11:7; 1 யோவான் 3:9). "வேதவசன மரபுச் சொற்றொடரில் கூடாதே என்பது அடிக்கடி செய்யலாகாது என்று அர்த்தப்படுகிறது, மத்தேயு 9:15; 12:34; 16:3 ..."[11]*

*தேவன் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டியவராக இருக்கிறார் (மத்தேயு 4:10) என்பதால், அவர் தம்மைப் பின்பற்றுபவர்கள் வேறு எவருக்கும் அல்லது வேறு எதற்கும் ஊழியம் செய்வதை அவர் எதிர்பார்ப்பதில்லை. தேவனைத் தவிர வேறு யாருக்கும் அல்லது எதற்கும் நமது பற்றுறுதியும் கனமும் கொடுக்கப்பட்டால், அவர் எரிச்சல் மூட்டப்படுகிறார்; ஏனெனில் அவர் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் (1 கொரிந்தியர் 10:22; மேலும் காண்க யாத்திராகமம் 20:5; உபாகமம் 4:24; 5:9; 32:16, 21).*

*கர்த்தருடைய பந்தியிலும் விக்கிரகங்களின் பந்தியிலும் உண்ணுதலின் முரண்பாட்டைப் பவுல் வலியுறுத்தினார் (1 கொரிந்தியர் 10:16-22). கிறிஸ்தவர்கள், புறதெய்வ வணக்கக் கோயில்களில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகளை உண்டால், அவர்கள் பேய்களை ஆராதித்தலில் ஈடுபட்டிருந்தனர் என்றாகிறது.*

> *இஸ்ரவேல் மக்கள் பலிபீடத்தில் பலிசெலுத்தி அந்தப் பலியின் ஒரு பாகத்தை உண்டபோது (லேவியராகமம் 7:15; 8:31; உபாகமம் 12:17, 18), அவர்கள் பலிசெலுத்தும் முறைமை மற்றும் தேவனை ஆராதித்தல் ஆகியவற்றில் பங்கேற்று அவற்றில் ஒரு பாகமாயினர். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவோ அல்லது விக்கிரகமோகூட நமக்கு ஒரு பொருட்டாக உள்ளது என்று அல்ல, ஆனால் புறதெய்வ வணக்கத்தார் பலிசெலுத்தும்போது, அவர்கள் அதைப் பேய்களுக்குச் செலுத்துகின்றனர் என்று பவுல் கூறினார், மேலும் அவர் பேய்களுக்குச் செய்யும் ஆராதனையில் கொரிந்தியர்கள் பங்கேற்பதை விரும்புவதில்லை என்றும் கூறினார். ஏனெனில் ஒருவர் - கிறிஸ்துவுக்குள் பங்கு பெறுதல் மற்றும் பேய்களில் பங்கு பெறுதல் என்ற - இவ்விரண்டையும் செய்ய இயலாது.[12]*

*இவ்விடத்தில் கர்த்தருடைய பந்தி என்பது பவுலின் பிரதான அக்கறைக்குரிய விஷயமாக இல்லாதிருந்தாலும் (1 கொரிந்தியர் 10:16-22), கொரிந்தியர்கள் பேய்களின் ஆராதனையில் ஈடுபடுதலுக்கு எதிராக அவர்களை அவர் எச்சரிக்கையில், இதை (கர்த்தருடைய பந்தியை)ப் பற்றியும் அவர் சத்தியங்களைப் போதித்தார்.*

# *1 கொரிந்தியர் 11:17-34*

*1 கொரிந்தியர் 11:17-34ல் பவுல், கர்த்தருடைய பந்தியை மதிக்காதிருந்த சில உறுப்பினர்களின் நடத்தையைத் திருத்த நாடினார். அவர்கள் அதை உண்கையில் தாங்கள் கர்த்தருடன் கொண்டிருந்த உறவுமுறையை மேம்படுத்துவதற்குப் பதிலாக அதை அவர்கள் மிகவும் மோசமாக்கிக் கொண்டிருந்தனர் (1 கொரிந்தியர் 11:17). இராப்போஜனத்தைச் சரியான முறையில் கடைப்பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்கும் அதில் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொள்ளாதிருந்தவர்களுக்கும் இடையில் பிரிவினைகள் வளர்ந்து கொண்டிருந்தன. சரியானவற்றைச் செய்துகொண்டிருந்தவர்களுக்கும் அவற்றைச் செய்யாது இருந்தவர்களுக்கும் இடையில் தவிர்க்க இயலாத வகையில் பிரிவினைகள் எழும்பிக் கொண்டிருந்தன (1 கொரிந்தியர் 11:18, 19; மத்தேயு 10:34-36; லூக்கா 12:51-53 ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திக்கவும்).*

*இந்த சந்தர்ப்பப் பொருளில் "இராப்போஜனம்" என்பது மாலையில் கடைப்பிடிக்கப்படுதல் என்று அர்த்தப்படுத்துவதாக வலியுறுத்தக் கூடாது. இது இயேசு இப்பந்தியை ஏற்படுத்திய காட்சி அமைவைக் குறிக்கிறது மற்றும் இது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நாளின் வேளையைக் குறிப்பதாக இருப்பதில்லை. இது கர்த்தர் ஏற்படுத்தியதாலும் இது அவரைக் கனப்படுத்துவதாலும், இது கர்த்தரின் இராப்போஜனம் என்று அழைக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 11:23-25).*

### *பவுலின் அக்கறை (11:18)*

*பவுல், "நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்" என்று எழுதியபோது (1 கொரிந்தியர் 11:21) அவரது அக்கறைக்குரிய விஷயம் என்னவாக இருந்தது? குறைந்த பட்சம் மூன்று சாத்தியக்கூறுகள் உள்ளன:*

*(1) "கொரிந்தியர்கள் கர்த்தருடைய பந்தியைக் காட்டிலும் 'அன்பின் விருந்துகளுக்கு' (காண்க யூதா 12) முன்னுரிமை கொடுத்திருக்கலாம். மிகவும் வளமானவர்கள், தாங்கள் கொண்டுவந்தவற்றை ஏழைகள் மற்றும்/அல்லது அடிமைகள் ஆகியோருடன் பகிர்ந்து கொள்ளாமல் தாங்களாகவே உண்டனர்."*

*பவுல் அன்பின் விருந்து பற்றியல்ல ஆனால் கர்த்தருடைய இராப்போஜனம் பற்றியே மிகவும் அக்கறை கொண்டிருந்தார் என்பதே இவ்விளக்கத்தில் உள்ள பிரச்சனையாகும். சிலர் தங்கள் உணவை ஏழைகளுடன் பகிர்ந்து* கொள்ளாது *உண்டதற்காக அவர்களைத் திருத்திக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள் இராப்போஜனத்தின் புனிதத்தன்மையைக் கெடுத்துக் கொண்டிருந்தனர் என்பதாலேயே அவர்களைத் திருத்தினார். தேவையில் உள்ளவர்கள் பற்றி அவர் அக்கறை கொண்டிருந்தார் என்றால், மிகவும் வளமானவர்கள் தங்கள் உணவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தாதது ஏன்? அவர்கள் உணவு இல்லாத அளவுக்கு மிகவும் ஏழைகளாக இருக்கவில்லை, ஏனெனில் அவர்கள் தங்கள் இல்லங்களில் உண்ண வேண்டும் என்று அவர் கூறினார் (1 கொரிந்தியர் 11:22, 34). சிலர் உணவைக் கொண்டு வந்திருந்தனர், மற்றும் பிறர் அதைக் கொண்டுவராதிருந்தனர்.*

*கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்ணும்படிக் கிறிஸ்தவர்கள்*

கூடிவந்தபோது, பொதுவான உணவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், இந்த உணவுகளை உண்பதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஏற்புடைய நடக்கை பற்றி அவர்களுக்குப் பவுல் அறிவுறுத்தி இருப்பார். மாறாக, சிலர் கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்டு கர்த்தருடைய இராப்போஜனத்திற்குப் பதிலாக அல்லது அத்துடன் தங்கள் சொந்த இராப்போஜனத்தை உண்டு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பழித்தனர் என்பதே பிரச்சனையாக இருந்தது. அவர்கள் அதற்குத் தக்கவகையில் மதிப்பளிக்கவில்லை. ஆகையால் அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஒரு உணவாக மாற்றியதன் மூலம் அதைக் கனவீனப்படுத்துவதற்கு மாறாக, தாங்கள் இல்லங்களில் உணவை உண்ண வேண்டும் என்று அவர்களுக்குப் பவுல் புத்திமதி கூறினார். உடல்ரீதியான பயன்கள் கொண்டிருந்த பொதுவான உணவுகளுக்கும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விருப்பநோக்கமாகக் கொண்டிருந்த கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும் இடையில் அவர்கள் பகுத்தறிய வேண்டும் என்பதே பவுலின் அக்கறையாக இருந்தது. அவர்களின் உடல்ரீதியான பசிகள் அவர்களின் சொந்த இல்லங்களில் கர்த்தருடைய ஐக்கிய விருந்திற்குப் புறம்பே அவர்களின் கூடுகையில், அவர்கள் உண்ணும் உணவுகளில் திருப்பிப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தன.

அந்தோணி திஸெல்ட்டன் அவர்கள், "வசனம் 17-34ஐ நாம், 'அன்பின் ... (அன்பின் விருந்து)' மற்றும் 'கர்த்தருடைய பந்தி' ஆகியவற்றைப் பற்றிய, காலத்திற்கு ஏற்பில்லாத முன் எண்ணங்களுடன் நாம் அவற்றை அணுகக் கூடாது"[13] என்று சரியாக எழுதினார். இதை நியூமன் அவர்கள் பின்வருமாறு ஒப்புக்கொண்டார்:

> *தெர்த்துல்லியன் அவர்கள் சாட்சியாக இருந்த காலகட்டத்தில் அவைகள் (அன்பின் விருந்துகள்) கடைசி இராப்போஜனத்துடன் தொடர்புபடுத்தப் படாதிருந்தன; அவர் ... கர்த்தர் ஒரு உணவு வேளையில் அந்தப் புனிதவிருந்தை ஏற்படுத்தினார், அதே வேளையில் சபை அதைக் கடைப்பிடிக்காமல் உதய காலத்திற்கு முன்பு கடைப்பிடிக்கிறது என்று வெளிப்படையாகக் கூறினார். உபத்திரவத்தின் காலங்களில் இரகசியமான இரவு வேளை ஆராதனை மற்றும் பஸ்கா கண்விழிப்பு ஆகியவற்றிற்குப் புறம்பேயும்கூட, கர்த்தருடைய இராப்போஜனம் எந்த உணவிற்கும் முன்னதாக முறையாகக் கடைப்பிடிக்கப் பட்டது ... திருவிருந்து என்பது உபவாசத்துடன்தான் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையானது, அதற்கு முன்பு ஒரு பொதுவான விருந்துணவுடன், விசேஷமாக மாலை வேளையில் நடைபெறும் அன்பின் விருந்துடன் எந்த உறவுமுறையையும் தவிர்க்கிறது என்பது மறைமுகமாக தெர்த்துல்லியன் அவர்களால் சான்றுபகரப்படுகிறது.[14]*

*(2)* "சில உறுப்பினர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஒரு பொதுவான உணவாக, கர்த்தருடைய இராப்போஜனம் என்பதற்குப் பதிலாகத் தங்கள் சொந்த இராப்போஜனம் என்பதாக உண்டுகொண்டிருந்தனர். இவ்விஷயத்தில், வேறு எந்த உணவும் பந்தி மேஜையின்மீது வைக்கப்படாது இருந்தது; அப்பமும் திராட்ச இரசமுமே கர்த்தருடைய இராப்போஜனத்தின் பயன்பாட்டிற்குக் கிடைக்கக் கூடியவையாக இருந்தன. மக்கள் தங்கள் சொந்தப்

*பசியைத் திருப்திப்படுத்தவும் அத்துடன் இயேசுவின் மரணத்தை நினைவுகூரவும் இந்தச் சின்னங்களை உண்டுகொண்டிருந்தனர்."*

இது "அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்" என்ற பவுலின் கூற்றிற்கு (1 கொரிந்தியர் 11:21) கணக்கு ஒப்புவிப்பதில்லை என்பதே இந்த விளக்கத்தின் பலவீனமாக உள்ளது. பலர், தங்கள் சொந்த இராப்போஜனத்தைக் கொண்டுவந்து அதை உண்டுகொண்டிருந்தனர் என்று பவுல் அர்த்தப்படுத்தினார் என்பதாகக் காணப்படுகிறது. கர்த்தருடைய இராப்போஜனம், ஒரு உணவிற்குப் போதுமான அப்பத்தையும் சிலர் குடித்து திருப்தி அடைவதற்கான திராட்ச இரசத்தையும் கொண்டிருந்ததா என்பது பற்றியும் நாம் ஆச்சரியப்பட்டாக வேண்டும்.

(3) "கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த உணவுகளை அல்லது விருந்தளிப்பவரால் அளிக்கப்பட்ட உணவுகளைக் கொண்டிருந்தனர்." H. L. கவுட்ஜ் அவர்கள் இந்தக் கண்ணோக்கைப் பற்றிக் கொண்டிருந்தார். "அனேகமாக ... உணவைப் பொதுவாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் தாம் கொண்டுவந்திருந்த உணவுப்பொருள்களைத் தாமே உண்டனர் என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்கலாம்."[15]

திசில்ட்டனின் விளக்கவுரைகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவைகளாக உள்ளன:

> கண்ணோக்கில் உள்ளது ஒரு கடைப்பிடிப்பு விருந்தாகவோ அல்லது தனிப்பட்ட இரவு உணவாகவோ இருந்தால், அப்படிப்பட்ட நோக்கங்களுக்கு அவர்கள் *தங்கள் இல்லங்களைப்* பயன்படுத்த வேண்டும் என்று பவுல் இடித்துரைக்கிறார். ஒரே வீட்டில் இருநோக்கங்களைக் கொண்டுள்ள நிகழ்வுகளைப் பற்றிக்கொண்டிருக்க அவர்கள் உண்மை யிலேயே சில பொருளாதார அல்லது சமூகக் காரணிகளால் வற்புறுத்தப் பட்டிருக்கிறார்களா?[16]

தொடர்ந்து அவர் பின்வரும் இரு உற்றுநோக்கக் கருத்துக்களைக் கூறினார்:

> இங்கு பவுல் ஒரு இரட்டை நேர்மாறுக் கருத்தைத் தரவழைத்திருப்பதாகக் காணப்படுகிறது: (அ) நீங்கள் ஒரு வீட்டைச் சொந்தமாகக் கொண்டிருந்தால், *கர்த்தருடைய இராப்போஜனத்தைக்* கடைப்பிடித்தலுடன், சபை என்ற வகையில் சகவிசுவாசிகளுடன் உங்கள் வீட்டில்/இல்லத்தில் கூடிவரும் நிகழ்வுடன், *விருந்தினர்களை ஒரு உணவுக்கு அழைக்கும் நிகழ்வை* ஒன்றாக்கக்கூடாது; (ஆ) ஒரு நபருடைய இல்லத்தைக் கூடுகை அல்லது ஆராதனைக்காகப் பயன்படுத்துதலில் "பரிசுத்த இடம்" மற்றும் மிகவும் குறிப்பாக "பரிசுத்த நேரம்" என்பவை மறைமுகமாக உணர்த்தப்படுகின்றன, அதே இடம் இல்லப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுதல் பற்றிக் குழப்பம் அடையக்கூடாது.[17]

கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் அவர்களின் சொந்த இராப்போஜனம் ஆகியவற்றிற்கு இடையில் அவர்கள் தெளிவான வித்தியாசத்தை ஏற்படுத்தினர் என்பதை உறுதிசெய்வதற்காகப் பவுல், அவர்கள் தங்கள் உணவுகளை இல்லத்தில் உண்ண வேண்டும் என்று அறிவுறுத்தினார். அவர்கள் ஒன்றுகூடி வருதல் என்பது அவர்களின் உடல்ரீதியான பசியை

*தனிப்பட்ட வகையில் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் என்பதற்கு மாறாக, ஆவிக்குரிய நோக்கம் கொண்டிருக்க வேண்டும்.*

***பவுலின் மறுசெயல் (11:22)***

*உண்டுகொண்டிருந்தவர்களிடம் பவுல், " ... தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா?" என்று கேட்டார் (1 கொரிந்தியர் 11:22). சிலர் முழுமையாகக் கைவிடப்பட்டு உண்பதற்கு ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தனர் என்று பவுல் அர்த்தப்படுத்தினாரா? ஒருவேளை அவ்வாறு அவர் செய்யாதிருக்கலாம், ஏனெனில் அங்கு உணவு இல்லாது இருந்தவர்கள் இல்லத்தில் உணவைக் கொண்டிருந்தனர் மற்றும் உண்பதற்கு வீடுகளைக் கொண்டிருந்தனர் என்று அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டார். அவர்கள் பசியாக இருந்தால் இல்லத்தில் உண்ணவேண்டும் என்று அவர்களிடம் அவர் கூறினார் (1 கொரிந்தியர் 11:34). அவர்கள் உண்பதற்கு ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தால், அவர் இன்னும் அதிகக் குறிப்பாகக் கூறியிருக்க முடியும். அவர்களை அவர் "ஏழைகள்" (ptoxos) என்று குறிப்பிட்டிருக்க முடியும் மற்றும் ஏழைகளான "இல்லாதவர்கள்" இல்லத்தில் சென்று உண்ண வேண்டும் என்று கூறுவதற்குப் பதிலாக அவர்களுடன் "உள்ளவர்கள்" தங்கள் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறியிருக்கலாம்.*

*அந்த நாட்களில் இருந்த [வசதிக்குறைவான] பயண வகைகள் நிமித்தம், நகரில் பரவலாகச் சிதறி இருந்த உறுப்பினர்கள் [ஆராதனை கூடும் இடத்திற்கு] ஒரே நேரத்தில் வந்து சேருதலில் சிரமம் கொண்டு இருந்தி ருக்கலாம். ஒருவேளைஆராதனை ஊழியங்கள் சில வேளைகளில் நீண்ட நேரம் நடைபெற்றிருக்கலாம். சிலர் இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தலில் கர்த்தருக்கு தக்க மதிப்பைக் காண்பிப்பதைக் காட்டிலும் தங்கள் சொந்தப் பசியின் மீது அதிக அக்கறை கொண்டிருந்து இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், உண்பதற்கு ஒன்றும் கொண்டுவராதவர்கள் அல்லது தாமதமாக வந்தவர்களைக் குறித்து அக்கறை எதுவும் இன்றி, தங்கள் சொந்த உணவுகளைத் தாங்களே உண்ணத் தொடங்கி இருக்கலாம். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்பதற்கு முன்னர் மற்றவர்கள் வரக் காத்திருக்க வேண்டும் என்று பவுல் எழுதினார். உணவுகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் "புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும்" வீடுகளைக் கொண்டிருந்தனர் என்று பவுல் குறிப்பாக அவர்களுக்குக் கூறினார் (1 கொரிந்தியர் 11:20-22).*

*இராப்போஜனத்தின்போது பொது உணவுகளை உண்டவர்கள், குழப்பம் மற்றும் பிரிவினை ஆகியவற்றிற்குக் காரணமாகி, மற்றவர்களின் ஆராதனைக்கு இடையூறு ஏற்படுத்தினர். அவர்கள் இயேசுவுக்கும் அவரைக் கனப்படுத்த உண்மையான முயற்சி மேற்கொண்டிருந்தவர்களுக்கும் மதிப்பளிக்காதவர்களாக இருந்தனர். அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களுக்கு விரோத உணர்வைக் காண்பித்தது மட்டுமின்றி, உண்பதற்கு ஒன்றும் கொண்டுவராத அல்லது எதையும் உண்பதைத் தேர்ந்துகொள்ளாதவர்களுக்கு முன்பாக உண்பதன் மூலமாக, அவர்களுக்கு வெட்கத்தையும் கொண்டுவந்தனர்.*

*கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பவர்கள், பொறுமையற்று இருப்பதற்குப் பதிலாக, அவர்கள் இராப்போஜனத்தை ஒன்றாக உண்பதற்காக*

ஒருவர் பிறருக்காகக் காத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். ஃப்ரெட் ஃபிஷர் அவர்களின் பின்வரும் விளக்கம் சரியானதாக உள்ளது: "*நீங்கள் உண்பதற்கு ஒன்றுகூடி வரும்போது* அது, இராப்போஜன ஆசரிப்புக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தலை அடையாளப்படுத்துகிறது."[18]

(1 கொரிந்தியர் 11:21) ம் வசனத்தில் குறிப்பிடப் பட்டவர்களுக்குப் பவுல், 1 கொரிந்தியர் 11:33, 34ல், அவர்கள் தங்கள் சொந்த உணவை முதலில் உண்டு அதைத் தங்கள் முன்னுரிமையாகக் கொண்டிருந்ததையும், கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு மேலாக தங்களின் உணவிற்கு முதலிடம் கொடுத்ததையும் கண்டித்து உணர்த்தினார். "கர்த்தருடைய இராப்போஜனம் என்பது பொதுவான விருந்து அல்ல, அது மனிதர் தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்வதற்குக் குறிக்கப்பட்ட இடமும் அல்ல. "[19]

சகோதரர்கள் தங்கள் கூடுகைகளில் கர்த்தரின் இராப்போஜனத்தை மதிக்க வேண்டும் என்றும் சாத்தியமான எந்த ஒரு தடையையும் நீக்கிப்போட வேண்டும் என்றும் பவுல் சகோதரர்களிடம் வேண்டிக் கொண்டார்.

### இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டது பற்றிப் பவுலின் போதனை (11:23-26)

இயேசு இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது அங்கு பவுல் இருக்கவில்லை என்பதால், அதைப் பற்றி அவர் பிறரிடம் இருந்து அறிந்தார் என்று கருத்து தெரிவித்தனர். ஆஸ்கர் கல்மேன் அவர்கள், "நாம் அவரது சொந்த வார்த்தைகளை நம்பலாம் என்றால் (1 கொரிந்தியர் 11:23), (அது) ஒரு விசேஷித்த வெளிப்படுத்துதலினால் அவருக்குத் தெளிவாக்கப்பட்டிருந்தது" என்று உறுதிப்படுத்தினார்.[20] பவுல், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்" என்று எழுதினார், இது கேள்வியைத் தீர்த்து வைக்க வேண்டும்.

கொரிந்தியர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை மதியாமைக்காக அவர்களைக் கண்டித்து உணர்த்தியபின்பு பவுல், இராப்போஜனத்தின் நோக்கம் மற்றும் அர்த்தம் ஆகியவற்றை விளக்குதல் மூலம் சூழ்நிலையைத் திருத்த நாடினார். கிறிஸ்தவர்கள் ஒரு சமூகநிகழ்வைப் பகிர்தல் அல்லது உடல்ரீதியான பசிகளை நிறைவு செய்துகொள்ளுதல் என்பதைக் காட்டிலும் பெரியதொரு நோக்கத்திற்காக ஒன்றுகூடிவருகின்றனர். நாம், இயேசுதாமே இருந்து தமது உடலையும் இரத்தத்தையும் நமக்குக் கையளிப்பது போன்ற அதே பயபக்தி நிறைந்த எண்ணப்போக்குடன் அப்பத்திலும் திராட்ச இரசத்திலும் பங்கேற்க வேண்டும்.

"இராப்போஜனம்" என்பதற்கான (*deipnon*; 1 கொரிந்தியர் 11:21 என்ற) கிரேக்க வார்த்தை "நாளின் முதன்மை உணவு"[21] என்று மாத்திரம் அர்த்தப்படும் பெயர்ச்சொல்லாக உள்ளது (காண்க மத்தேயு 23:6; மாற்கு 6:21; 12:39). வினைச்சொல்லானது (*deipneo*; 1 கொரிந்தியர் 11:25) பெயர்ச்சொல்லாக உள்ளது போன்று, "இராப்போஜனம்பண்ணி" (KJV) அல்லது "இராப்போஜனம் செய்தல்" (NKJV; NASB; NIV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த பெயர்ச்சொல்லோ அல்லது வினைச்சொல்லோ, அந்த உணவு உண்ணப்பட்ட நாளின் வேளையைச் சுட்டிக்காண்பிப்பதில்லை. வினைச்சொல்லானது, "*ஒரு உணவை உண்ண (இதில் நாளின் வேளை அல்லது உணவின் வகைபற்றிய குறிப்பு*

*இல்லை), உண்ணுதல், உணவு உண்ணுதல் லூக்கா 17:8; 22:20; 1 கொரிந்தியர் 11:25 ... வெளிப்படுத்தின விசேஷம் 3:20"*[22] என்று விளக்கப்படுகிறது. இது, கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு ஏற்படுத்திய நாளின் வேளையின் நிமித்தம் "கர்த்தருடைய இராப்போஜனம்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கலாம், ஆனால் "கர்த்தருடைய உணவு" அல்லது "கர்த்தருடைய விருந்து" என்பதே இதன் அர்த்தமாக உள்ளது. "போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து" (1 கொரிந்தியர் 11:25) என்ற கூற்று மிகச்சரியானதாக உள்ளது; ஆனால் "போஜனம்" என்பதற்கான வார்த்தை ஒரு வினைச்சொல்லாக இருப்பதால், "அவர் உணவு உண்டபின்பு" அல்லது "அவர் உண்ட பின்பு" என்பது அதிகம் நேர்ப்பொருளான மொழிபெயர்ப்பாக உள்ளது. இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் பஸ்கா உணவை உண்டு முடித்திருந்தார் என்பதே இதன் கருத்தாக உள்ளது.

ஆல்பெர்ட் பேர்னெஸ் அவர்கள் பின்வரும் முடிவைத் தரவழைத்தார்:

> இவையாவும் வழக்கமான பஸ்கா உணவைக் கடைப்பிடித்த *பின்னர்* நிகழ்ந்தன. ஆகையால் இது அதனுடைய பாகமாக இருந்திருக்கவோ அல்லது இது ஒரு பண்டிகை அல்லது விருந்து உணவாக மாத்திரம் இருக்கும்படி வடிவமைக்கப்பட்டிருக்கவோ முடியாது. அவர்கள் இதை விருந்தின் நிகழ்வு போன்று யூகித்ததாகக் காணப்பட்டதால், இது அவ்வாறு இருந்திருக்க இயலாது என்று அவர்களுக்குக் காண்பிக்கவே அப்போஸ்தலர் இதை அறிமுகப்படுத்தினார் என்பது தெளிவு.[23]

இயேசுவைப் பின்பற்றுபவர்கள், அவரின் நினைவாக இராப்போஜனத்தை உண்ண வேண்டும் என்று அவர் போதித்தார் (வசனங்கள் 24, 25).

> இவ்வாறாக, பஸ்கா உணவு தானே, இஸ்ரவேல் மக்கள் என்றென்றைக்கும் கடைப்பிடிக்கும் வண்ணம் அப்படிப்பட்டதொரு "நினைவுகூருதலாக" இருந்தது, எனவே இயேசு இப்போது அந்த "நினைவுகூருதலை," உண்மையான இஸ்ரவேல் மக்கள் அவரது நாமத்திலே உணவுமேஜையைச் சுற்றி ஒன்றுகூடி அவர் மூலமாகத் தாங்கள் பெற்றுக்கொண்ட விடுதலையை "நினைவுகூர" வேண்டும் என்பதற்காக இப்போது இயேசு அதை மறு அமைப்புச் செய்தார்.[24]

சபையானது இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கும் வரையில் நாம், "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம்" (வசனம் 26). "தெரிவிக்கிறோம்" (*kataggello*) என்பது அறிவித்தலாக உள்ளது. கர்த்தருடைய பந்தியை நடத்துபவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றிப் பேசுதல் என்பது அவரது மரணத்தை அறிவிக்கும் ஒரு வழியாக உள்ளது. அப்பமும் பாத்திரமும், நமது பாவங்களுக்காக இயேசுவின் தியாகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதை சபைக்குழுமத்திற்கு அவர்கள் நினைவூட்ட முடியும்.

### *பவுல் விரும்பிய விளைவுகள் (11:27-29; 31-34)*

பவுலின் அறிவுறுத்துதல்களைக் (கொரிந்து நகரின்) கிறிஸ்தவர்கள் தக்கவகையில் புரிந்துகொண்டு குறிப்பிட்ட சரிப்படுத்தும் அளவைகளை

மேற்கொண்டால், கொரிந்து நகரில் கர்த்தருடைய இராப்போஜனம் பற்றி எழுந்த பிரச்சனைகளைப் பவுலின் போதனை தீர்த்து வைக்கும்.

*(1) நாம் "அபாத்திரமாய்" (வசனம் 27) புசித்துப் பானம்பண்ணக் கூடாது.* பவுலின் அக்கறை, புசிப்பவர்களின் பாத்திரத்தன்மை பற்றியதாக அல்ல, ஆனால் புசித்தலில் அவர்களின் நடக்கையைப் பற்றியதாக இருந்தது. எவரொருவரும் இயேசுவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பாத்திரராக இருப்பது இல்லை. இது திசில்ட்டன் அவர்களால் "அவர்களின் புரிந்துகொள்ளுதல், எண்ணப்போக்கு, மற்றும் நடக்கை ஆகியவை, கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும், மீட்பு மற்றும் சமூக நிபந்தனைகள் ஆகிய இரண்டிலும் பகிர்ந்து கொள்ளுதலில் *உண்மைத்தன்மை வாய்ந்ததாக* இருக்கின்றனவா என்று தங்களைத் தாங்களே *சோதித்தறிதலால்* உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்" என்று சுருக்கமாக உரைக்கப்பட்டபடி செய்யப்படக்கூடும்.[25]

*(2) நாம் "கர்த்தரின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாக" இருக்கக் கூடாது.* டேவிட் பிரையர் அவர்கள் பின்வருமாறு உற்றுநோக்கியுள்ளார்:

> கிறிஸ்துவின் இரத்தம் *சிந்துதல்* குறித்து நீங்கள் குற்றமுள்ளவர்கள் ஆவது அத்தியாவசியமே: அதாவது நீங்கள் அவரது பாடுகளின் பலன்களில் பகிர்ந்து கொள்பவர்களின் தோழமையில் அல்ல ஆனால் அவரது சிலுவை மரணத்திற்குக் காரணமானவர்களின் தோழமையில் உங்களையே வைக்கிறீர்கள்.[26]

ரிச்சர்டு B. ஹே அவர்களின் விளக்கம் இவ்விஷயத்தை மிகைப்படுத்தி உரைப்பதாக இருக்கலாம், ஆனால் அது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாக உள்ளது:

> அவர்கள், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், தொடர்ந்து பாவம் செய்து "தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தி" (எபிரெயர் 6:6) கடமையில் தவறியவர்கள் என்று குறைகூறப்பட்ட கிறிஸ்தவர்களைப் போன்று உள்ளனர்.[27]

இயேவின் மீதான விளக்கம் தவிர, சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றின் மீதான வேறு எந்த விளக்கமும் அதிகம் வலியுறுத்தம் வைக்கப்படக் கூடாது. இருப்பினும் இந்த அடையாளங்கள் மீதான மதிப்புக் குறைவானது, இவைகள் இயேசுவைப் பிரதிநிதித்துவப் படுத்தியதைக் காண்பதற்கு ஒரு நபர் தவறக் காரணமாகக் கூடும். "குற்றமானது கர்த்தருடைய சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் எதிராக அல்ல ஆனால் கர்த்தருக்கே எதிராக உள்ளது என்று நினைத்தல் அனேகமாக மிகச்சிறந்ததாக உள்ளது."[28]

*(3) இராப்போஜனத்தில் பங்கேற்றலில் நமது நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவை பற்றி நம்மை நாமே "சோதித்தறிய" நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்* (வசனங்கள் 28, 31, 32). இந்தப் பங்கேற்பவர்கள், தாங்கள் பாத்திரராக இருந்தனரா என்பதைத் தீர்மானிக்கத் தங்கள் வாழ்வில் உள்ள பாவங்களுக்காகத் தங்கள் இருதயங்களைச் சோதித்தறிய வேண்டும் என்று பவுல் கருத்துத் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் இராப்போஜனம் பற்றி சரியான எண்ணப்போக்கும் புரிந்துகொள்ளுதலும்

கொண்டிருப்பதை உறுதிப்படுத்தத் தங்களைத் தாங்களே சோதித்தறிய வேண்டியதாக இருந்தது. "இது ஒருவர் பந்திக்குப் பாத்திரராக இருக்கிறாரா என்று தீர்மானிக்கத் தனிப்பட்ட முறையில் ஆழமாக உள்நோக்கி ஆய்ந்தறிவதற்கான அழைப்பாக இருப்பதில்லை."[29]

> (ஒருவர் தம்மையே) சோதித்தறிதல் என்பது, இராப்போஜனத்தின் உண்மையான இயல்பு மற்றும் நோக்கம் ஆகியவற்றைப் பற்றிய அவரது இருதயத்தின் எண்ணப்போக்கு, அவரது புறம்பான நடக்கை மற்றும் அவரது புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றைச் சோதித்தலாக உள்ளது ... சுயசோதனையின் மூலமாக விசுவாசியானவர், கிறிஸ்துவின் மரணத்தை இந்த இராப்போஜனம் கொண்டாடுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்தறியாமல் தமது சொந்த முடிவில் புசித்து பானம் பண்ணுதலுக்கு எதிராகத் தம்மைக் காத்துக்கொள்கிறார்.[30]

(4) *புசிக்கும்போது "நிதானித்து அறிவதற்கு" நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும்* (வசனங்கள் 29, 30). "நிதானித்து அறிதல்" (*diakrino*) என்பது ஒரு மாறுபாட்டைப் பகுத்தறிதல் என்று அர்த்தப்படுகிறது. கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும் பொதுவான, சாதாரணமான உணவிற்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் அளவிற்குப் பகுத்தறியும் கருத்துணர்வைப் பயன்படுத்துதலே நிதானித்து அறிதலாக உள்ளது. இயேசுவைப் பிரியப்படுத்தும் வகையில் நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும் அளவுக்கு, நம்மை நாமே நிதானித்து அறிய வேண்டும் (வசனம் 31). 31ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ("நிதானித்து அறிதல்" என்ற) இதே வார்த்தையின் ஒரு வடிவம், (கிரேக்க வேதாகமத்தில்) வேறுபட்ட சந்தர்ப்பப்பொருளில் 29ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, 31ம் வசனத்தில் உள்ள இந்த வார்த்தைக்குச் சிலர் மாறுபட்ட அர்த்தத்தை நாடியுள்ளனர். இது நியாயந்தீர்க்கப்படுதல் என்பதாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

> இது 29ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்ட வினைச்சொல்லுக்கு இதே மொழிபெயர்ப்பைப் பராமரித்தல் என்பது ஏதோ அழகற்றதாகத் தோன்றுகிறது ..., ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பப் பொருளிலும் தனிச்சிறப்பான தன்மை உண்மையில் ஒன்றுபோலவே உள்ளது. ஆய்வுக்குட்படும் செயப்படுபொருளின் ஏற்புடைய தனித்தன்மையானது உறுதியாகத் தோன்றும் அளவுக்கு, நமது *உடல்/வாழ்வு* என்ற எழுவாயானது இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பினூடே (*-krinein*) கடந்துசெல்வதாக (*dia-*) உள்ளது.[31]

31ம் வசனத்தில் உள்ள தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்பது, பங்கேற்பாளர்கள் பலவீனமாக, வியாதிப்பட்டு அல்லது நித்திரையில் இருப்பதால் நித்தியத்திற்கும் தண்டிக்கப்படுவார்களா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக அல்ல. மாறாக, தகுதியற்ற நடக்கையைத் திருத்துவதற்காகத் தேவன் ஒழுங்குபடுத்தும் வகையில் நியாயந்தீர்க்கிறார் (வசனம் 32). கோர்டன் ஃபீ அவர்கள் பின்வருமாறு உற்றுக் கவனித்தார்:

வியாதிப்பட்டவர் அல்லது மரணம் அடைந்தவர் நித்திய இழப்பைக் கொண்டு அச்சுறுத்தப்படுகின்றனர் என்று பவுல் அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, இப்படிப்பட்ட "நியாயத்தீர்ப்பு" என்பது, அன்பான தேவன் தமது பிள்ளைகளைத் திருத்தும் செயலில் கொண்டுள்ள தெய்வீக "ஒழுங்குபடுத்துதல்" என்ற வகையில் இது புரிந்துகொள்ளப்பட வேண்டும். நாம் கடைசிநியாயத்தீர்ப்புக்குக் கொண்டு செல்லப்படும்போது, "உலகத்தோடு சேர்ந்து நாமும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாதிருத்தல்" என்பதே இப்படிப்பட்ட ஒழுங்குபடுத்துதலின் நோக்கமாக உள்ளது ...[32]

கர்த்தர் சிட்சித்தல் பற்றிய இந்த முடிவு சரியானதாக உள்ளது என்றால், 30ம் வசனத்தில் பவுல், சரீரப்பிரகாரமாக அல்ல ஆனால் ஆவிக்குரிய வகையில் நித்திரையாக இருப்பவர்களைக் குறித்தே பேசி இருக்க வேண்டும். மரணம் அடைந்தவர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்துக் கொள்ளும்படி அவர்களைத் தேவன் சிட்சிக்கிறாரா? அவர்கள் தாங்கள் வாழும் வகையையோ அல்லது இராப்போஜனத்தைத் தகுதியற்ற வகையில் உண்பதையோ திருத்திக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனரா?

நம்மை நாமே நிதானித்து இராப்போஜனத்தைச் சரியான வகையில் கண்ணோக்கினால், ஆவிக்குரிய பலவீனம், வியாதிப்படுதல் மற்றும் நித்திரை என்ற வருந்தத்தக்க நிலையில் இருந்து நம்மை விழித்தெழச் செய்வதற்குக் கர்த்தருடைய சிட்சை நமக்குத் தேவைப்படாது. இராப்போஜனத்தைத் தகுதியற்ற வகையில் உண்பவர்கள், ஆவிக்குரிய வகையில் அசட்டையானவர்களாக வலுவற்றவர்களாக முடியும்; ஆகவே அவர்கள் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்பட்டு சிட்சிக்கப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 11:31, 32).

(5) *நாம் "சரீரத்தின்" மீது கவனம் குவிக்க வேண்டும்.* "சரீரம்" என்பதன் அர்த்தம் குறித்து மூன்று சாத்தியக்கூறுகள் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன. முதலாவது, சரீரம் என்பது சபையாக இருக்கலாம். "சரீரம் என்பது இராப்போஜனத்தை ஒன்றாகக் கூடிக்கடைப்பிடிக்கும் சபையின் மக்களை அர்த்தப்படுத்துகிறது என்றால், அவர்கள் இந்த ஐக்கியத்தின் தெய்வீக இயல்பைப் பகுத்துணராத காரணத்தினால் நியாயத்தீர்ப்பு வருகிறது ..."[33] இரண்டாவது, இது " 'உங்களுக்காக' இயேசு அடைந்த மரணத்தில் பங்கேற்பவர்களின் பகிர்வை"[34] உள்ளடக்கும் கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய குறிப்பாக இருக்கலாம். மூன்றாவது, இது இயேசுவின் பௌதீக உடலை அர்த்தப்படுத்தலாம். வேறொரு இடத்தில் "கிறிஸ்துவின் சரீரம்" என்பது சபைக்கான குறிப்பைக் கொண்டிருந்தாலும், இந்தக் காட்சி அமைவில் "சரீரம்" என்பது சபைக்காகப் பயன்படுத்தப் படவில்லை (11:24, 27). இராப்போஜனத்தில் பங்கேற்பவர்கள் சபையைக் குறித்துக் தக்க வகையிலான எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் அவசியம் என்பது உண்மையே, ஆனால் இவ்விஷயத்தில் "சரீரம்" என்பது சிலுவையின்மீது இயேசு ஒப்புக்கொடுத்த சரீரத்தை அர்த்தப்படுத்துவதாகவே காணப்படுகிறது.

"சரீரம்" என்பது விசுவாசிகளின் கூட்டம் என்று உறுதிப்படுத்தும் சிலர், "சரீரம்" என்பது கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பிரதிநிதித்துவம் என்ற வகையில் இராப்போஜனத்தைக் குறிக்கிறது என்றால், பின்பு "இரத்தம் குறிப்பிடப்படாதது ஏன்?" என்று விவாதிக்கின்றனர்.[35] இதேபோன்ற (இன்னொரு) கேள்வியும்

கேட்கப்பட முடியும்: "இதற்கு முன்பு 1 கொரிந்தியர் 10:21ல் பந்தியின் தொடர்பாக அப்பம் குறிப்பிடப்படாமல் பாத்திரம் மட்டும் குறிப்பிடப்பட்டது ஏன்?"

கர்த்தருடைய சரீரத்தை நிதானித்து அறியத் தவறுதல் என்பதைப் பின்வரும் விளக்கம் மிகச்சிறப்பாக விளக்கியுரைப்பதாகக் காணப்படுகிறது:

> "அப்பமும் திராட்சரசமும் நமக்காகக் கர்த்தரின் சுயதியாகத்தைக் குறிக்கிறது என்பதை அவர் [பங்கேற்பவர்] உணர்ந்து அறியாதிருந்தால்" என்பதே மிகவும் சாத்தியமான விளக்கமாகக் காணப்படுகிறது.[36]

> அடையாளங்களைக் கனப்படுத்தாதிருத்தல் என்பது அவைகள் பிரதி நிதித்துவப்படுத்தும் விஷயங்களைக் கனப்படுத்தாதிருத்தலாக உள்ளது; மற்றும் அப்பத்தையும் திராட்சரசத்தையும் கொரிந்தியர்கள் பயன்படுத்தியது போன்று பயன்படுத்துதல் என்பது கிறிஸ்துவின் மரணத்தின் நினைவுச் சின்னங்கள் பற்றி சர்ச்சை செய்வதாக இருந்தது, ஆகையால் அவர்கள் அதை அவமானப்படுத்துதலுடன் நினைவுகொண்டாடினர்.[37]

> 1 கொரிந்தியர் 12:13; கொலோசெயர் 1:18 ஆகியவற்றில் உள்ளது போன்று, *சரீரம்* என்பது சபையாக இருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் இந்தச் சொற்றொடர் 27ம் வசனத்தில் அர்த்தப்படுத்தியது எதுவோ அதிலிருந்து ஏதேனும் மாறுபட்ட அர்த்தம் தரும் என்று நினைப்பதற்கு உண்மையான காரணம் எதுவும் இல்லை என்பதாகவே காணப்படுகிறது.[38]

இந்த விளக்கத்தை ஃபிஷர் அவர்கள், சற்றே மாறுபட்ட வழியில் ஒப்புக்கொள்கிறார்:

> கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் சாதாரண உணவு ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தத் தவறுதல் என்பதல்ல, ஆனால் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கொண்டு பிரதிநிதித்துவப் படுத்தப்படுவது என்ன என்பதைக் காணத்தவறுதலே பாவமாக உள்ளது. அப்பம் என்பது இயேசுவின் வாழ்வு என்ற சரீரத்தைக் குறித்து நிற்கிறது. அதை நினைவுகூராமல் ஒருவர் அதை உண்டால், *அவர் சரீரத்தைக் குறித்து நிதானித்து அறியாமல் உண்ணுகிறார்.* சபையின் சடங்கு ஒன்றின் ஆவிக்குரிய அர்த்தத்தை அனுபவித்து உணராமல் அதில் ஈடுபடுதல் பாவமாக உள்ளது என்று பவுல் நினைத்தார்.[39]

அப்பத்திலும் பாத்திரத்திலும், அவை பிரதிநிதித்துவப்படுத்துகிற இயேசுவின் தியாகமான சரீரத்தையும் இரத்தத்தையும் காணாதவர்கள், அதில் பங்கேற்பதன் மூலம் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகின்றனர் (1 கொரிந்தியர் 11:29). "நியாயத்தீர்ப்பு" (*krima*) என்பது "ஆக்கினைத்தீர்ப்பு" என்றும் அர்த்தப்படக்கூடும் (மத்தேயு 23:14; லூக்கா 23:40; 1 தீமோத்தேயு 3:6; யூதா 4). பங்கேற்பவர்கள், ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்பிக்கொள்வதற்காக, தங்களைத் தாங்களே சோதித்தறிந்து அதில் ஈடுபட வேண்டும். இராப்போஜனத்தை உண்ணுகையில் நாம் தக்கவகையிலான பயபக்தி உணர்வைக் காண்பிக்க வேண்டும்.

***தகுதியற்ற வகையில் கடைப்பிடித்தல் பற்றிப் பவுலின் எச்சரிக்கை (11:30)***

*இராப்போஜனத்தில் தக்க வகையிலும் பயபக்தியுடனும் பங்கேற்பதில் இருந்து ஆவிக்குரிய பலன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன; இருப்பினும் அவ்வாறு செய்யத் தவறுதல், பலவீனம், வியாதி மற்றும் நித்திரை ஆகியவற்றை விளைவிக்கின்றன (1 கொரிந்தியர் 11:30). பல விளக்கவுரையாளர்கள் யூகிப்பதும், பலரால் கைவிடப்பட்ட ஒரு கண்ணோட்டமாக உள்ளதான, இராப்போஜனத்தை மதிப்புக்குறைவாகக் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவர்கள் உடல் ரீதியான அல்லது ஆவிக்குரிய துன்பத்தினால் பாடு அனுபவிப்பார்கள் என்று பவுல் அர்த்தப்படுத்தினாரா? இராப்போஜனத்தைத் தகுதியற்ற வகையில் கடைப்பிடிப்பதால் மக்கள் உடல்ரீதியாக பலவீனமாகி, வியாதிப்பட்டு அல்லது மரிக்க வேண்டியது ஏன்? ஆவிக்குரிய பிரச்சனைகளே பெரும்பாலும் விளைவாக இருக்கலாம். இவ்வார்த்தைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்.*

*''பலவீனம்'' (asthenes) என்பது உடல்ரீதியான வியாதி அல்லது பலவீனத்தைக் குறிக்கிறது (மத்தேயு 25:39; நடபடிகள் 4:9; 5:15). இது ஆவிக்குரிய பலவீனத்தையும் அர்த்தப்படுத்தலாம் (மத்தேயு 26:41; ரோமர் 5:6; 1 கொரிந்தியர் 4:10; 8:7, 10; 9:22; கலாத்தியர் 4:9; 1 தெசலோனிக்கேயர் 5:14). "Astheneia'' என்ற பெயர்ச்சொல் வடிவமானது, உடல்ரீதியான (மத்தேயு 8:17; லூக்கா 5:15) மற்றும் ஆவிக்குரிய பலவீனம் (ரோமர் 6:19; 8:26; கலாத்தியர் 4:13; எபிரெயர் 4:15; 5:2; 7:28) ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்று aestheneo என்ற இதன் வினைச்சொல் லானது - உடல்ரீதியாக (மத்தேயு 10:8; 25:36; லூக்கா 7:10; பிலிப்பியர் 2:20) அல்லது ஆவிக்குரிய வகையில் (நடபடிகள் 20:35; ரோமர் 4:19; 8:3; 14:1, 2, 21; 1 கொரிந்தியர் 8:9, 11, 12) - "வியாதிப்படுதல்" மற்றும் "பலவீனமடைதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*"வியாதி" (arrostos) என்பது முதன்மையாக உடல்ரீதியான வியாதியை அர்த்தப்படுத்துகிறது (மத்தேயு 14:14; மாற்கு 6:5, 13; 16:18).*

*"நித்திரை" (koimao) என்பது மரணத்திற்கு (மத்தேயு 27:52; யோவான் 11:11; நடபடிகள் 7:60) மற்றும் உடல்ரீதியான உறக்கத்திற்கு (மத்தேயு 28:13; லூக்கா 22:45; நடபடிகள் 12:6) பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*"Katheudo,'' என்ற இன்னொரு கிரேக்க வார்த்தையும்கூட, உடல்ரீதியான உறக்கம் (மத்தேயு 8:24; 9:24) மற்றும் ஆவிக்குரிய நித்திரை (எபேசியர் 5:14; 1 தெசலோனிக்கேயர் 5:6) ஆகியவற்றைக் குறிக்கிறது. கொரிந்து நகரில் இருந்த சிலர் இராப்போஜனத்தின் ஆவிக்குரிய மறைகருத்துக்கள் மற்றும் அர்த்தம் ஆகியவற்றை மதியாதிருந்த காரணத்தினால், ஆவிக்குரிய வகையில் பலவீனமாக, வியாதிப்பட்டு அல்லது நித்திரையில் இருந்தனர்.*

## தொகுப்புரை

*கொரிந்து நகரில் இருந்த சபையில் இரு முதன்மைப் பிரச்சனைகள் எழும்பி இருந்தன. சில உறுப்பினர்கள் புறதெய்வ வணக்கக் கோயில்களில் உண்டு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவில் பங்கு பெற்றிருந்தனர். மற்றவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்திற்குத் தக்கவகையிலான மதிப்பைக் காண்பியாது இருந்தனர். புறதெய்வ போஜனபந்திகளில்*

ஒன்றுகூடி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்டவர்கள் விக்கிர ஆராதனையில் பங்கேற்றனர் என்று பவுல் எழுதினார். கர்த்தருடைய போஜனபந்தியிலும் பேய்களின் போஜனபந்தியிலும் உண்பதில் இருந்து கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு உண்மையான பற்றுறுதியைக் காண்பிக்க இயலாது.

கர்த்தருடைய இராப்போஜனம் இயேசுவின் நினைவுகூருதலாக உண்ணப்பட வேண்டியதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், ஆவிக்குரிய பலன்களைப் பெறுவதற்கு, இந்தச் சின்னங்களை உண்பதற்கான நமது நோக்கத்தை நிதானித்து இவற்றுடன் இணைந்துள்ள ஆவிக்குரிய மறைகருத்துக்களைப் பகுத்துணர வேண்டும். இராப்போஜனத்தைப் பொதுவான உணவுகளுடன் இணைவு செய்யக்கூடாது. பசியாக இருக்கும் கிறிஸ்தவர்கள் வீட்டில் உண்ண வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாக உள்ள நாம், கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் அவர் ஏற்படுத்திய நினைவின் மூலமாக, கர்த்தருடைய இராப்போஜனம், கர்த்தருடைய சபை மற்றும் நம்மையே குறித்தும்கூட தக்க கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]ஒருவேளை கர்த்தருடைய இராப்போஜனத்துடன் தொடர்புடையதாக உள்ள கூடுதல் அறிவுறுத்துதல் 1 கொரிந்தியர் 5:7, 8ல் காணப்படுகிறது. [2]Heinrich August Wilhelm Meyers, *Critical and Exegetical Handbook to the Epistle to the Corinthians* (New York: Funk and Wagnalls, 1884), 228. [3]Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 3, *The Epistles of Paul* (New York: N.p., 1886; McLean, Va.: MacDonald Publishing Co., n.d.), 243. [4]Ibid., 145. [5]Anthony C. Thiselton, *The First Epistle to the Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2000), 756. [6]Meyers, 228. [7]Werner Elert, *Eucharist and Church Fellowship in the First Four Centuries,* trans, N. E. Nagel (St. Louis: Concordia Publishing House, 1966), 64. [8]Vincent, 243. [9]W. Harold Mare, "1 Corinthians," *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians*, ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 251. [10]David Prior, *The Message of 1 Corinthians* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1985), 174.

[11]Robert Young, "Hints and Helps to Bible Interpretation (Preface number, 52)," *Analytical Concordance of the Bible,* 22d ed. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), n.p. [12]Mare, 251. [13]Thiselton, 852. [14]Albert Henry Newman, "Agape," *The New Schaff-Herzog Encyclopedia of Religious Knowledge,* ed. Samuel Macauley Jackson (Grand Rapids, Mich.: Baker Book House, 1951), 1:80. Newman cited Tertullian *The Chaplet* 3 and *To His Wife* 2.5. [15]H. L. Goudge, *The First Epistle to the Corinthians,* Westminster Commentaries, ed. Walter Lock, 3d ed., rev. (London: Methuen & Co., 1911), 99. [16]Thiselton, 864. [17]Ibid., 865. [18]Fred Fisher, *Commentary on 1 & 2 Corinthians* (Waco, Tex.: Word Books, 1975), 190. [19]Albert Barnes, *Notes on the New Testament,* 1 Corinthians, ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1972), 223. [20]Oscar Cullmann, "The Lord's Supper and the Death of Christ," in Oscar Cullmann and F. J. Leenhardt, *Essays on the Lord's Supper,* trans. and ed. J. G. Davies (Cambridge: Lutterworth Press, 1958; reprint, Atlanta, Ga.: John Knox Press, 1975), 17.

[21]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 215. [22]Ibid. [23]Barnes, 215. [24]Gordon D. Fee, *The Epistle to the Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 553. [25]Thiselton, 891.[26]Prior, 189. [27]Richard B. Hays, *First Corinthians,* Interpretation, A Bible Commentary for Teaching and Preaching, ed. James Luther Mays (Louisville, Ky.: John Knox Press, 1997), 201. [28]Fisher, 188. [29]Fee, 561. [30]Mare, 260.

[31]William F. Orr and James Arthur Walther, *1 Corinthians*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1976), 268. [32]Fee, 566. [33]Orr and Walther, 274. [34]Thiselton, 893. [35]W. Harold Mare, Notes on 1 Corinthians, *NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1955), 1751. [36]Robert G. Bratcher, *A Translator's Guide to Paul's First Letter to the Corinthians* (New York: United Bible Societies, 1982), 113. [37]Archibald Robertson and Alfred Plummer, *Critical Commentary of First Corinthians* (Edinburgh: T. & T. Clark, 1911; reprint, 1936), 251. [38]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1958), 164. [39]Fisher, 189.